தி.மு.க.
இளைஞர் அணி

இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி
ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வ. எண்	நாள்	கழக மாவட்டம்	சட்டமன்றத் தொகுதி	இடம்	பேச்சாளர்கள்
	31.03.2025	திருப்பூர் வடக்கு	திருப்பூர் தெற்கு	சேரன் காலனி, ராக்கியாபாளையம், நல்லூர்	செந்தில்வேல், ப.விஜயராஜ்
	31.03.2025	விழுப்புரம் தெற்கு	விக்கிரவாண்டி	காணை தெற்கு ஒன்றியம், கொடார்	சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மு.ரோஜா

அன்பகம், சென்னை – 18.
நாள் : 28–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

ஏழைகள் உழைப்பிற்கு கூலி கொடுக்க மனமில்லாத ஒன்றிய பா.ஜ.க. அரசு!

உழைக்கும் மக்களையே ஊழல்வாதிகள் என முத்திரை குத்த தமிழ்நாடு பா.ஜ.க.வினர் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள்!

கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, மார்ச் 31 –

ஏழைகள் உழைப்பிற்குக் கூலி கொடுக்க மனமில்லாத ஒன்றிய பா.ஜ.க. அரசு, உழைக்கும் மக்களையே ஊழல்வாதிகள் என முத்திரை குத்ததமிழ்நாடுபா.ஜ.க.வினர் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள் என கழகத் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்திருப்பதாவது:–

"உழைப்பவன் கூலியை வியர்வை உலர்வதற்கு முன்பு கொடுத்துவிடு" எனச் சொல்கிறது ஒரு பொன்மொழி.

ஆனால், எளியவன் உழைத்தாலும் கூலியைக் கொடுக்காமல் வயிற்றில் அடி என்கிறது ஒன்றிய அரசின் புதுமொழி. 100 நாள் வேலைத் திட்டத்திற்கான சம்பளப் பாக்கி 4,034 கோடி ரூபாயை நிறுத்தி வைத்து கொடுங்கோல் ஆட்சியாகவே மாறிவிட்டது ஒன்றிய அரசு. வறுமையின் காரணமாக 100 நாள் வேலையில் இணைந்து உழைப்பவர்கள் அனைவரையும் ஊழல்வாதிகள் போலச் சித்தரித்து ஊதியப் பணத்தைக் கொடுக்க மாட்டோம் என்பது கொடுங்கோல் ஆட்சியில் கூட நடக்காதது. ஏழைகள் உழைப்பிற்குக் கூலி கொடுக்க மனமில்லாத ஒன்றிய பா.ஜ.க. அரசு, உழைக்கும் மக்களையே ஊழல்வாதிகள் என முத்திரை குத்த தமிழ்நாடு பா.ஜ.க.வினர் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள்.

100 நாள் வேலைத் திட்டத்திற்கான நிதியை ஒதுக்கச் சொல்லி முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி வலியுறுத்தினார்; நாடாளுமன்றத்தில் தி.மு.க. மற்றும் தி.மு.க. கூட்டணி உறுப்பினர்கள் குரல் எழுப்பினார்கள். பைசா கூட ஒதுக்காத ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுக்க திமுக போராட்டம் நடத்தியது. மோடி அரசுக்கு எதிரான போராட்டத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் தவிக்கிறது கமலாலயம்!

தமிழ்நாட்டின் ஏழைகள் ஊதியமின்றி தெருவில் நிற்கும் போது ஒன்றிய அரசிடம் போராடி பணத்தைப் பெற்றுத் தருவதுதானே தமிழ் நாட்டைச் சார்ந்தவர்களின் கடமையாக இருக்க வேண்டும்?

கல்வி நிதி, பேரிடர் நிதியை எல்லாம் தராத ஒன்றிய அரசு, இப்போது 100 நாள் வேலை பணியாளர்களின் ஊதியத்தை நிறுத்தி அவர்களைப் பட்டினி போடுகிறது. உழைப்பை உறிஞ்சிக்கொண்டு ஊதியத்தைக் கேட்பவர்களையே கொச்சைப்படுத்தும் பா.ஜ.க. வினருக்குத் தமிழ்நாட்டு மக்கள் தக்கப் பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்கத்தின் சார்பாக,புனித ரமலான் ஈகை பெருவிழாவை முன்னிட்டு,மாநிலத் தலைவர் ரெ.தங்கம், இஸ்லாமிய பெருமக்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.சங்க மாநில நிர்வாகிகள் க.இளங்கோவன், வேளச்சேரி கி.பத்மநாபன்,பாஸ்டர் மோசஸ் செபஸ்டியன், ஓஹூர் கே.சின்னச்சாமி, ஜி.குமார் ஆகியோர் உடன் உள்ளனர்.

வேலூர் தொகுதி – ஆரணி ரோட்டில் அமைந்துள்ள

திரௌபதி அம்மன் கோயில் திருப்பணிக்கு நிதி ஒதுக்கிட வேண்டும்!

சட்டப் பேரவையில் ப.கார்த்திகேயன் கோரிக்கை!

சென்னை, மார்ச். 30- சட்டப் பேரவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் ப.கார்த்திகேயன், வேலூர் தொகுதி ஆரணி ரோட்டில் அமைந்துள்ள திரௌபதி அம்மன் கோயில் திருப்பணிக்கு நிதி ஒதுக்கித் தரப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதுபற்றிய விவாதம் வருமாறு:-

ப.கார்த்திகேயன்: தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம். என்னுடைய வேலூர் தொகுதி, ஆரணி *road*ல் அமைந்திருக்கின்ற திரௌபதி அம்மன் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்ய வேண்டும். அக்கோயில் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. சாலைகள் *develope* செய்யப்பட்ட

காரணத்தால், திரௌபதி அம்மன் கோயில் 8 அடி, 9 அடி பள்ளத்திற்குச் சென்று விட்டது. அக்கோயிலுக்கு ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் கருங்கல் திருப்பணிகள் செய்ய திட்டமிட்டிருக்கிறோம். அமைச்சர் அவர்கள், திருப்பணிக்கான நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் கோரிய நிதி, அந்த மண்டலத்தினுடைய இணையாளர் பரிந்துரையோடு ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்படுமானால் உடனடியாக அதற்குண்டான நிதியை ஒதுக்கித் தருவதோடு மட்டுமல்லாமல், *Lifting* முறையை இந்த ஆட்சி ஏற்பட்ட பின்னர், இதுவரையில் 9 திருக்கோயில்களில் வெற்றிகரமாக முடித்திருக்கிறோம். நம்முடைய பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் சேகர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, ரவீஸ்வரர் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கோயிலுக்கு, சூரிய ஒளி நேராக ஈஸ்வரன் மீது படுகின்ற அந்த திருக்கோயிலுக்கு *Lifting* முறையில், 8 அடி பள்ளத்திலிருந்த திருக்கோயிலை தற்போது திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு தரைமட்டத்திற்கு அந்தத் திருக்கோயிலை உயர்த்தும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் நீங்கள் கோரிய திருக்கோயிலுக்கு சம்பந்தப்பட்ட *technicians* அனுப்பி பரிசோதிக்கச் சொல்கிறோம். *Lifting* முறையே பயன்படுத்தப்பட முடியும் என்றால், அதற்குச் செலவும் குறைவாக இருக்கும். அதற்குண்டான ஏற்பாடுகளை மேற்கொள்வோம் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் கோரிய கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றித் தரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

கீழ்பென்னாத்தூர் ஒன்றிய தி.மு.க. சார்பில் தாலுகா அலுவலகம் எதிரில் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து சட்டபேரவைத் துணைத்தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா, ஆரஞ்சி ஆறுமுகம், இரா.சிவக்குமார், சி.கே.பன்னீர், சி.கே.அன்பு, மா.குப்புசாமி, தேவேந்திரன், நித்யா, இரா.சதஷ், பிரகாஷ் மற்றும் கோ.சரவணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.